**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண்.57/2023

வாதி தரப்பு 1வது சாட்சி சண்முகவள்ளி என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. சண்முகவள்ளி | வயது | : | 40/24 |
| கணவர் பெயர் | : | ராஜா | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | வசந்தபுரி நகர் | தொழில் | : | வீட்டு குடித்தனம் |

நாள்-13.08.2024

வா.சா.1

**<u>முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கில் வாதி. நான் முதல் விசாரணை நிரூபண பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்திருக்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் படித்து பார்த்து கையெழுத்து போட்டேன். அதில் உள்ள விசயங்கள் உண்மையானது.

1) எனது ஆதார் அட்டை நகல் வா.சா.ஆ.1,

2) எனது பணியாளர் அடையாள அட்டை சான்றிட்ட ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.2,

3) 24.09.2022ம் தேதியிட்டு பிரதிவாதி சம்மட்டிவிடுதி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3,

4) 25.09.2022ம் தேதி பிரதிவாதிக்கு சம்மட்டிவிடுதி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு ரசீதின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4,

5) 27.09.2022ம் தேதியிட்டு சம்மட்டிவிடுதி காவல் நிலையத்திலிருந்து எனக்கு கொடுத்த அழைப்பாணை அசல் வா.சா.ஆ.5,

6) 01.10.2022ம் தேதி எனது அண்ணி அன்னபூரணி புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் பிரதிவாதி மீது கொடுத்த புகார் மனுவின் நகல் வா.சா.ஆ.6,

7) 06.10.2022ம் தேதி சம்மட்டிவிடுதி காவல் நிலைய உதவி ஆய்வாளரிடம் நான் கொடுத்த வாக்குமூலத்தை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் நான் பெற்ற சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7,

8) தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் நான் பெற்ற சம்மட்டிவிடுதி காவல் நிலைய புகார் மனு ரசீது எண்.263/2022 கோப்பின் சான்றிட்ட ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.8,

9) 21.09.2022ம் தேதி நான் புதுக்கோட்டை மாவட்டம், முத்தக்கோன்பட்டியில் உள்ள பள்ளியில் பணிபுரிந்ததற்கான வருகை பதிவேடு சான்றிட்ட ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.9,

10) 03.03.2023ம் தேதியிட்டு நான் எனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ-10,

11) 03.03.2023ம் தேதி பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.11,

12) 20.03.2023ம் தேதி பிரதிவாதி அவரது வழக்கறிஞர் மூலம் கொடுத்த பதில் அறிவிப்பு அசல் வா.சா.ஆ.12,

தாவாப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணைக்காக வாய்தா வழங்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.